# நெல்லை தமிழ்மொழி வளர்ப்புச் சங்கம்.

## ஹிந்தியை எதிர்க்க வேண்டுகோள்.

### காரியதரிசிகள் அறிக்கை.

திருநெல்வேலி, செப். 15.

ஐயா,

இம்மாகாணத்தில் உள்ள உயர்தரக் கலாசாலைகளிலும் லோயர் செக்கண்டரி ஸ்கூல்களிலும் ஒன்று, இரண்டு, மூன்று பாகங்களில் ஹிந்தி மொழியை அவசர அவசரமாக இந்த சர்க்கார் புகுத்தப்போவதை உடனே ஆக்ஷேபித்து, அந்த ஆக்ஷேபணைகளை சர்க்காருக்கு தெரிவிக்கும்படி ஒவ்வொரு கல்லூரி, ஹைஸ்கூல் தலைவர்களையும் தென்னாட்டிலுள்ள தமிழ் சங்கங்களையும் நாங்கள் கேட்டுக் கொள்ளுகிறோம். இவ்வாறு ஆக்ஷேபணை தெரிவிக்கக் கேட்டுக் கொண்டதற்கு பல காரணங்களுள் முக்கியமானவை கீழ்வருபவைகளாகும்.

1. வடநாட்டிலே அங்கொருவர் இங்கொருவருமாக வியாபாரிகளால் பேசப்பட்டு வந்தாலும் கட்டாயப் பாடமாக வட இந்தியாவிலில்லை.

2. தென்னாட்டவர்களின் அறிவு வளர்ச்சிக்கோ அல்லது வியாபாரத்துக்கோ அது தேவையுமில்லை.

3. தற்காலத்திலே ஆங்கில மொழியிலுள்ள சரித்திரம், சைன்ஸ் முதலிய பாடங்களை தாய் மொழியிலே கற்பிக்கப்பட வேண்டும் என்ற கிளர்ச்சி தோன்றி அதற்காக மொழி பெயர்ப்புகள் ஏராளமாக நடைபெற்று வருவதை இது கண்டிப்பாகப் பாதிக்கும்.

4 மாணவர்கள் கற்கவேண்டிய பாடங்களை அதிகப்படுத்துவதோடு பொதுவாக சிறுவர்களின் அறிவு வளர்ச்சியை மழுங்கச் செய்யும் என்பதில் சந்தேகமில்லை.

5. அம்மொழி இந்நாட்டவரின் கலைத் திறமையையோ, கைத்தொழில் திறமையையோ, வியாபாரத் திறமையையோ விஞ்ஞான வளர்ச்சியையோ விருத்தி பண்ண முடியாது. இத்தகைய ஒன்றுக்கும் உதவாத ஒரு மொழியை மக்கள் வயிற்றுக்குக் கஞ்சியில்லாமல் தடித்துக் கொண்டிருக்கிற நிலைமையை நிவர்த்தி பண்ண வருமானம் இடங்கொடுக்காமலிருக்கையில் இதற்காகப் பொதுப் பணத்தைப் பாழ்படுத்துவது நேர்மையா?

6. ஹிந்துக்களையும் மகமதியர்களையும் ஒற்றுமைப்படுத்தி தேசிய ஐக்கியம் இது உண்டு பண்ணும் என்பது ஒருநாளும் முடியாத காரியமாகும். ஏனெனில் இருவகுப்பாரும் தனித்தனி எழுத்துக்களைக் கொண்ட மொழியை வழங்கி வருகிறார்கள்.

7. தென்னாட்டினரில் ஒரு சிலர் இதை ஒரு பிரேமையாகக் கொண்டாதரிக்கிறார்களே ஒழிய இது ஒருநாளும் தேசிய மொழியாக வரமுடியாது. அகில உலக தேசிய பாஷையாயும் இந்தியாவெங்கும் வயிற்றுப்பிழைப்புப் பாஷையாகவும், நவீன அறிவு வளர்ச்சிக்கும், நாகரீகத்திற்கும், சுதந்தரதாகம், சுதந்தர உணர்ச்சி, சுயமரியாதை ஆகியவை கொளுந்துவிட்டெரிவதற்கும் உலகத்திற்கே பொக்கிஷமாக தாராளமாக உபயோகிப்பதற்கும் உதவியாயிருக்கிற ஆங்கிலமொழி ஒன்று இருக்கையில் இம்மொழியின் அவசியமென்ன?

8. மகாஜனங்களுடைய விருப்பத்திற்கு மாறாக எந்தக் காரியத்தையும் செய்யமாட்டோம் என்று சொல்லி—உறுதியளித்து இன்று அதிகாரத்திலிருக்கும் காங்கரஸ் கட்சி மந்திரி சபை இதுமாதிரி செய்யத் துணிந்திருப்பது யதேச்சதிகாரமாகச்செய்வது என்பதேயாகும்.

9. தேசிய நலனுக்காவும், சகோதரத்துவத்திற்காகவும் தங்களது முழு ஜீவனையும் தியாகம் செய்து வருகிற இந்திய பெரியோர்களில் "மகாத்மா" காந்தி, டாக்டர் ரவீந்திரநாத் தாகூர் போன்றவர்கள் இதை கட்டாயப்பாடமாக்க ஆதரவளிக்கவில்லை